RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 165 | ஜூன்.20, 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## ராக்கெட் வேகத்தில் இயங்குகிறது தமிழக அரசு: இது ராமாயணம் போல் கட்டுக்கதையல்ல; நிதர்சனம்



நாகப்பட்டினம்: ஜூன்.20-

'முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு ராக்கெட் வேகத்தில் இயங்கி வருகிறது. இது கம்பராமாயணம் போல கட்டுக்கதை அல்ல, நிதர்சனம்' என்று உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்தார்.

நாகை மாவட்டம் கீழ்வேளூர் சட்டப்பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட பாப்பாகோவில், குறிச்சி, பிரதாபராமபுரம், திருக்குவளை உள்ளிட்ட 7 ஊராட்சிகளில், மக்களுடன் முதல்வர் திட்ட 3ம் கட்ட முகாம் நேற்று நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் ஆகாஷ் தலைமை வகித்தார். உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன், கீழ்வேளூர் எம்எல்ஏ நாகை மாலி, மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் கவுதமன் கலந்து கொண்டனர்.

குறிச்சி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற முகாமில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி அமைச்சர்கோவி. செழியன் பேசும்போது,'' காலையில் வெங்கடேஸ்வரி என்கிற மாற்றுத் திறனாளி மனு அளித்தார். அவருக்கு உடனடியாக சக்கர நாற்காலி வழங்கப்பட்டுள்ளது. அவரிடம் வலது கையில் மனு வாங்கி, இடது கையில் பரிசீலித்து, மீண்டும் வலது கையில் திட்டத்தை தீட்டி தருவதுதான் ஸ்டாலின் அரசு.

ஆமை வேகத்தில் இயங்கிய அரசாங்கத்தை ராக்கெட் வேகத்தில் இயக்குபவர் முதல்வர் ஸ்டாலின். நான் சொல்வது நிதர்சனம். இது கம்பராமாயணம் போல் கட்டுக்கதை அல்ல'' என்றார். அமைச்சரின் இந்தப் பேச்சு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



## மதுரையில் முருக பக்தர்கள் மாநாட்டு திடலில் மாதிரி அறுபடை வீடுகளில் வேல் பிரதிஷ்டை

மதுரை: ஜூன்.20-

முருகனின் அறுபடை வீடுகளில் பூஜை செய்து எடுத்து வரப்பட்ட வேல் மதுரையில் அமைக்கப் பட்டுள்ள மாதிரி அறுபடை வீடுகளில் பிரதிஷ்டை செய்யப் பட்டது. மதுரை பாண்டிகோயில் அருகே அம்மா திடலில் இந்து முன்னணி சார்பில் 22ம் தேதி முருக பக்தர்கள் மாநாடு நடைபெறுகிறது. இதையொட்டி மாநாட்டு வளாகத்தில் முருகனின் அறுபடை வீடுகளின் மாதிரி கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு பூஜைகள் செய்யப்பட்டு பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்படுகிறது.

நீண்ட வரிசையில் காத்திருப்பு: மதுரையில் ஒரே இடத்தில் அமைக்கப்பட்டுள்ள அறுபடை வீடுகளின் மாதிரியை தரிசிக்க மதுரை உட்பட பல்வேறு மாவட்டங்களிலிருந்து பக்தர்கள் வருகின்றனர். நேற்று பக்தர்களின் கூட்டம் அதிகமாக இருந்தது. பலர் குடும்பத்துடன் வந்து நீண்ட வரிசையில் காத்திருந்து அறுபடை முருகனை தரிசித்தனர். நேற்று வேல் பிரதிஷ்டை நடைபெற்றது.

முன்னதாக, வைகாசி விசாக தினத்தில் பூஜை செய்யப்பட்ட வேலை விவசாயிகள், தொழிலாளர்கள், குறவர் சமூக மக்கள், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள், கலைஞர்கள் குழுவினர் ஊர்வலமாக எடுத்து வந்தனர். அந்த வேல் பூஜை செய்யப்பட்டு மூலவர் சிலை அருகே பிரதிஷ்டை செய்யப்பட்டது. அப்போது முருக பக்தர்கள், பொதுமக்கள் அரோகரா கோஷம் எழுப்பினர்.

பின்னர் பக்தர்கள் ஒரே நேரத்தில் கந்த சஷ்டி கவசம் பாடினர். இந்த நிகழ்ச்சியில் இந்து முன்னணி தென் பாரத அமைப்பாளர் பக்தவச்சலம், தமிழக அமைப்பாளர் ராஜேஷ், பொதுச் செயலாளர் முருகானந்தம், பாஜக மாநில பொதுச் செயலாளர் ராம.சீனிவாசன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மின்தடை அறிவிப்பு



20.06.2025 வெள்ளிக்கிழமை சிவகங்கை கூட்டுமின் தொகுப்பு துணை மின் நிலையத்தில் பராமரிப்பு பணி நடைபெறுவதால் சிவகங்கை நகர் மற்றும் சுற்றியுள்ள கிராமங்கள் முத்துப்பட்டி, காஞ் சிரங்கால், காமராஜர் காலனி, பையூர் ,, கூத்தாண்டன், வாணியங்குடி, கீழக்கண்டனி, சுந்தர நடப்பு, சோழபுரம் சூரக்குளம் ஆகிய ஊர்களுக்கு காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை மின் விநியோகம் தடைபடும் என்பதை பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இவன்

செயற்பொறியாளர் பகிர்மானம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் சிவகங்கை

## பாஜக அரசின் மொழி இன வெறி பற்றி அதிமுக பேசவே இல்லை: கீழடி விவகாரத்தில் ஸ்டாலின் காட்டம்




சென்னை: ஜூன்.20-

"கீழடி அகழாய்வுகள் நடத்தப்பட்டபோது அதிமுக ஆட்சி நடைபெற்றது. ஆனால், கீழடி அகழாய்வு முடிவுகளை ஏற்க மறுக்கும் ஒன்றிய பாஜக அரசின் மொழி வெறி இன வெறி நடவடிக்கை பற்றி அதிமுக இதுவரை வாய் திறக்கவில்லை" என முதல்வர் ஸ்டாலின் குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து திமுக தொண்டர்களுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், "பாண்டிய மன்னரின் படைகள்தான் மறுபடியும் அணிவகுத்ததோ, பட்டாளச் சிப்பாய்கள்தான் களம் புகுந்தனரோ என விழிகள் வியந்து பார்க்கின்ற வகையில் மதுரை விரகனூர் சாலையில் ஜூன் 18ஆம் நாள் திமுக மாணவரணியினர் அன்னைத் தமிழின் பெருமை காத்திடக் களமிறங்கினர். தமிழர்களின் பண்பாட்டுப் பெருமையைப் பறைசாற்றும் கீழடி அகழாய்வுகள் குறித்த அறிவியல்பூர்வமான ஆய்வறிக்கையை ஒன்றிய பாஜக அரசு திட்டமிட்டுப் புறக்கணித்து, திருப்பி அனுப்பியதற்கான எதிர்வினைதான் திமுக மாணவரணியின் மாபெரும் ஆர்ப்பாட்ட அணிவகுப்பு.

மாணவரணிச் செயலாளர் சகோதரர் ராஜீவ்காந்தியும் மாணவரணியின் துணைச் செயலாளர்களும் ஒருங்கிணைந்து, மாணவர்கள் இளைஞர்கள் இளம்பெண்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து, 'கீழடி தமிழர் தாய்மடி' என்ற முழக்கத்துடன் புறநானூற்று வீரர்கள் போல ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டாக உணர்ச்சிமிகு குரலெழுப்பி, தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் செவிப்பறை கிழியச் செய்திருப்பதை, திமுக தலைவர் என்ற முறையிலும், தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற வகையிலும் பாராட்டி மகிழ்கிறேன்.

கீழடியில் நடந்த அகழாய்வுகள், தமிழர்களின் நாகரிகம் தனித்துவமான நாகரிகம் என்பதையும், தமிழர்களின் பண்பாடு மிகவும் தொன்மையானது என்பதையும் ஆதாரப்பூர்வமாக மெய்ப்பித்த அகழாய்வாகும். கருணாநிதி 2016 செப்டம்பர் 29 அன்று தனது சமூக வலைத்தளப் பக்கத்தில், "கீழடியில் உள்ள கட்டடங்களும், கிடைத்திருக்கும் பழங்காலப் பொருள்களும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் தொடங்கி, கி.பி. பத்தாம் நூற்றாண்டு வரை இங்கு வாழ்விடங்கள் இருந்ததற்கான சான்றுகளாக உள்ளன.

கட்டடங்கள் சதுரம், செவ்வகம், நீள்சதுர வடிவங்களில் உள்ளன. கட்டடங்கள் தெற்கு வடக்காகக் கட்டப்பட்டுள்ளன. அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய கருப்பு சிவப்பு நிறத்திலான மண் பானைகள் கிடைத்துள்ளன. சுடு செங்கற்களால் உற்பத்தி செய்யப்பட்ட தட்டுகள், குவளைகள் கிடைத்துள்ளன. தந்தம், செம்பு, இரும்பு ஆகியவை பயன்பாட்டில் இருந்திருக்கின்றன. அகழாய்வில் மொத்தம் 5,300 பொருள்கள் இதுவரை கிடைத்துள்ளன. இதன் மூலம் சங்க காலத் தமிழகம் நகர்ப்புற நாகரிகத்தை கொண்டதல்ல என்ற கருத்து தவறானது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்த அகழாய்வில் கிடைத்த தமிழ் பிராமி எழுத்துகள் கொண்ட பானை ஓடுகளும் மற்றும் தொல்பொருட்களும் தமிழர் நாகரிகத்தின் தொன்மையைப் பறைசாற்றுகின்றன. சிந்துசமவெளி நாகரிகத்தைப் போல இங்கும் ஒரு நகர்ப்புற நாகரிகம் இருந்ததற்கான தடயங்கள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. இதுவரை தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் கீழடியில் நடைபெற்றிருக்கும் ஆய்வுதான் மிகச் சிறப்பானது. புதிய தமிழ்ச் சொற்களும் இங்கு கிடைத்துள்ளன" என்று பதிவிட்டு மகிழ்ந்ததுடன், "ஹரப்பாவை ஒத்த தமிழர் நாகரிகத்துக்கான கீழடி சான்றுகளை உடனடியாகக் காப்பாற்றவும், பாதுகாக்கவும் தவறினால், அவை முடங்கிப் போகும் பேராபத்து உருவாகும்" என்ற எச்சரிக்கையையும் விடுத்திருக்கிறார்.

மூத்த மொழியாம் தமிழுக்குச் செம்மொழித் தகுதியைப் பெற்றுத்தந்த கருணாநிதி, 2016ஆம் ஆண்டிலேயே கீழடி ஆய்வுகளின் பெருமையை உலகத்தவர் அறிந்து கொள்ளும் வகையில் பதிவிட்டிருப்பதன் மூலம், வரலாற்றில் தமிழுக்கும் தமிழர்களுக்கும் உள்ள தனித்துவமான முக்கியத்துவத்தை உணர்த்தியிருக்கிறார். அதேவேளையில், நாம் கவனமாக இருக்க வேண்டும் என்று அப்போதே எச்சரித்தும் இருக்கிறார்.

கருணாநிதி எச்சரித்தது போலவே, தமிழ் என்றால் கசப்புடனும், தமிழர்கள் என்றால் வெறுப்புடனும் பார்க்கக் கூடிய ஒன்றிய பா.ஜ.க. அரசு, கீழடி அகழாய்வுகளில் வெளிப்பட்ட தமிழ்ப் பண்பாட்டின் பெருமையை மறைக்கவும் புதைக்கவும் தொடர்ந்து முயற்சித்து வருகிறது.

2013ஆம் ஆண்டு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் இந்தியத் தொல்லியல் துறையால் வைகை ஆற்றங்கரையில் தள ஆய்வு நடத்தப்பட்டு, கீழடி ஒரு முக்கிய குடியிருப்புத் தளம் என அடையாளம் காணப்பட்டது. அதன் பின்னர் அகழாய்வு தொடர்ந்த நிலையில் ஒன்றியத்தில் ஆட்சிக்கு வந்த பாஜக அரசு, 2015ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 3 கட்டங்களோடு கீழடி அகழாய்வை நிறுத்திக் கொண்டது. மீதமிருந்த 7 கட்டங்களையும் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை மேற்கொண்டது.

தொல்லியல் பணிகளை மேற்கொண்ட இயக்குநர் அமர்நாத் ராமகிருஷ்ணாவை அசாம் மாநிலத்திற்கு இடமாறுதல் செய்து தமிழ்ப் பண்பாட்டின் மீதான வெறுப்புணர்வை பாஜக அரசு அப்பட்டமாகக் காட்டியது. எனினும், அமர்நாத் ராமகிருஷ்ணா 2016இல் கீழடி அகழாய்வு குறித்த தொடக்க அறிக்கையையும், 2017ஆம் ஆண்டில் இடைநிலை அறிக்கையையும் இந்திய அரசின் தொல்லியல் துறையிடம் வழங்கினார். சட்டப் போராட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிற்கு அவர் மீண்டும் வந்து பணியாற்றினார்.

கீழடி அகழாய்வின் வாயிலாகத் தமிழர்களின் வைகை ஆற்று நாகரிகம் ஏறத்தாழ 2500 ஆண்டுகள் முதல் 3000 ஆண்டுகள் வரை பழமையானது என்பது தெளிவாகிறது. இது வெறும் கருத்துரீதியான தகவல் அல்ல. கீழடி அகழாய்வில் கிடைத்த பொருள்களை வகைப்படுத்தி உள்நாட்டிலும் உலகளவிலும் உள்ள சிறந்த ஆய்வுக்கூடங்களான புனே, பெங்களூரு, அமெரிக்காவின் புளோரிடா மற்றும் இத்தாலி ஆகியவற்றுக்கு அனுப்பி அங்கு ராயல் டெஸ்டிங், கெமிக்கல் டெஸ்டிங், கார்பன் டேட்டிங் உள்ளிட்ட ஆய்வுகளை மேற்கொண்டு அறிவியல்பூர்வமாக முடிவுகள் பெறப்பட்டு, அதனடிப்படையிலேயே 2023 ஆம் ஆண்டு 982 பக்க இறுதி அறிக்கையை அமர்நாத் ராமகிருஷ்ணா சமர்ப்பித்தார்.

இத்தனை ஆய்வுகள், அறிவியல்பூர்வமான முடிவுகள் கிடைக்கப்பெற்றும், கீழடி அகழாய்வு முடிவுகளை வெளியிடாமல் காலந்தாழ்த்தி, தமிழரின் பண்பாட்டுப் பெருமையை மறைக்க நினைக்கும் ஒன்றிய பாஜக அரசு, இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு இரண்டாண்டுகள் கடந்த நிலையில், கூடுதல் சான்றுகள் தேவை என்று திருப்பியனுப்பியிருக்கிறது. இது தமிழ்ப் பண்பாட்டின் மீதான பாஜக அரசின் அப்பட்டமான தாக்குதல்.

தரவுகள் எதுவுமில்லாத கற்பனையான சரஸ்வதி நாகரிகத்தை முன்னிறுத்தி, திராவிடப் பண்பாட்டு அடையாளமான சிந்துவெளி நாகரிகத்தை அழிக்க நினைக்கும் பாஜக இதுவரை சரஸ்வதி நாகரிகத்தை எந்தவித அறிவியல் சோதனைகள் மூலமாகவும் நிரூபிக்கவில்லை. ஆனால், தமிழர் பண்பாட்டு அடையாளமான கீழடி அகழாய்வில் கிடைத்த பொருள்கள் ஒவ்வொன்றும் உலகத் தரத்திலான அறிவியல்பூர்வமான ஆய்வுக்குட்படுத்தப்பட்டு நிரூபிக்கப்பட்டும்கூட அதனை ஏற்பதற்குப் பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய பாஜக அரசுக்கு மனது வரவில்லை. அந்தளவுக்குத் தமிழினத்தின் மீதான வெறுப்பு அந்தக் கட்சியின் கொள்கைகளில் ஊறிக் கிடக்கிறது.

அகழாய்வுகள் நடத்தப்பட்டபோது அதிமுக ஆட்சி நடைபெற்றது. ஆனால், கீழடி அகழாய்வு முடிவுகளை ஏற்க மறுக்கும் ஒன்றிய பாஜக அரசின் மொழிவெறி இனவெறி நடவடிக்கை பற்றி அதிமுக இதுவரை வாய் திறக்கவில்லை. அதிமுகவை பாஜகவிடம் அடகுவைத்த பழனிசாமி எப்படி வாய் திறப்பார்? ஏற்கெனவே அவருடைய அமைச்சரவையில் இருந்த ஒருவர், தமிழர் நாகரிகமான கீழடியை 'பாரத நாகரிகம்' என்று பாஜக மனம் குளிரும் வகையில் விளம்பியவரா யிற்றே!

தமிழ் மொழி ஸ்ரீ பண்பாடு தமிழர் பெருமையைப் போற்றிப் பாதுகாப்பதில் எப்போதும் முன்னணியில் நிற்கும் திமுக ஆட்சியில்தான் கீழடியில் அருங்காட்சியகம் உருவாக்கப்பட்டு, அகழாய்வில் கிடைத்த பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. தொன்மை மிக்க தமிழ்ப் பண்பாட்டின் அடையாளங்களை அறிவியல் தொழில்நுட்ப உதவியுடன் இன்றைய தலைமுறையினர் எளிதாகத் தெரிந்துகொள்ளும் வகையில் கீழடி அருங்காட்சியகம் திகழ்கிறது.

தமிழ்ப் பண்பாட்டின் காலம் 5300 ஆண்டுகளுக்கு முந்தைய தொன்மை கொண்டதாக இருப்பதை இரும்பின் தொன்மை என்ற பன்னாட்டுத் தரத்திலான ஆய்வுகள் வாயிலாக நிரூபித்துள்ளோம். வரலாற்றுப் பெருமை மிக்க அந்த ஆய்வு முடிவுகளை திராவிட மாடல் அரசு வெளியிட்டது. தமிழ்நாடு இந்தியாவில்தான் இருக்கிறது. தமிழ்மொழி இந்திய அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் இருக்கிறது. தமிழர்கள் இந்திய குடிமக்களாக வாழ்கிறார்கள். ஆனால், தமிழ்ப் பண்பாட்டின் பெருமைக்குரிய இரும்பின் தொன்மை முடிவுகள் குறித்து ஒரு 'ட்வீட்' போடக் கூட பிரதமர் தொடங்கி பாஜக ஆட்சியினருக்கு மனம் வரவில்லை. தமிழ்நாடு பாஜக வினரும் தங்கள் இன மொழி உணர்வைப் பதவிக்காகத் தலைமையிடம் விற்றுவிட்டு, தமிழர்களுக்கு துரோகம் இழைத்து வருகிறார்கள்.

இந்த நிலையில், தமிழ்ப் பண்பாட்டின் பெருமையைக் காக்கவும், அதை நிறுவவும் வேண்டிய பெரும் பொறுப்பு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், தமிழுணர்வுகொண்ட அதன் தோழமை சக்திகளுக்கும் மட்டுமே இருப்பதால்தான், கிளம்பிற்று காண் தமிழர் கூட்டம் என்கிற வகையில் கழக மாணவரணி மதுரையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தி, கீழடி ஆய்வு முடிவுகளை ஒன்றிய அரசு ஏற்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

திமுக துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்ற மாநிலங்களவைக் குழுத் தலைவருமான திருச்சி சிவா இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆற்றியுள்ள உணர்ச்சிமிகு எழுச்சியுரை, களம் நோக்கி பாயும் ஏவுகணைகளாக மாணவப் பட்டாளத்தை ஆயத்தமாக்கியுள்ளது. மாணவப் பருவத்திலேயே கழகத்தில் ஒப்படைத்துக்கொண்டு, கழக மாணவரணிச் செயலாளராகவும் செயலாற்றியவராயிற்றே அவர்!

கீழடியிலும் சென்னையிலும் ஒலித்திருப்பது முதல் கட்ட முழக்கம். இது டெல்லி வரை தொடர்ந்து எதிரொலிக்கும். தமிழரின் பண்பாட்டுப் பெருமையை நிலைநாட்டும் வரை கழகத்தின் போராட்டம் ஓயவே ஓயாது" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## மேட்டூர் அணை நீர் திறப்பு 12,000 கனஅடியாக அதிகரிப்பு



மேட்டூர்/தருமபுரி: ஜூன்.20-

மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்துக்கு நீர் திறப்பு விநாடிக்கு 12,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக, அணைக்கு நீர்வரத்து அதிகரித்தும், சரிந்தும் காணப்படுகிறது. அணைக்கு நேற்று முன்தினம் விநாடிக்கு 5,825 கனஅடியாக இருந்த நீர் வரத்து, நேற்று 6,040 கனஅடியாக அதிகரித்தது.

அணையிலிருந்து டெல்டா பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவானது நேற்று விநாடிக்கு 10,000 கன அடியிலிருந்து 12,000 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. நீர்வரத்தை விட, நீர் திறப்பு அதிகமாக உள்ளதால் நீர்மட்டம் சரிந்து வருகிறது. அணையின் நீர்மட்டம் 114.13 அடியாகவும், நீர் இருப்பு 84.41 டிஎம்சியாகவும் இருந்தது.

இதனிடையே, தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரியில் கடந்த 14ம் தேதி காலை நீர்வரத்து விநாடிக்கு 6,500 கனஅடியாக பதிவானது. அன்று முதல் 16ம் தேதி வரை அளவில் மாற்றமின்றி நீர்வரத்து நீடித்தது. 17ம் தேதி காலை விநாடிக்கு 6,000 கனஅடியாக நீர்வரத்து குறைந்தது. இந்நிலையில், நேற்று காலை மீண்டும் விநாடிக்கு 6,500 கனஅடியாக நீர்வரத்து உயர்ந்தது.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சியர் கிறிஸ்துராஜ் தலைமையில் மாணவர்களுக்கு சிறப்பு குறைதீர் கூட்டம் நடைபெற்றது.உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் யாதவ் கிரிஷ் அசோக், மாவட்ட வருவாய் அலுவலர் கார்த்திக் கேயன், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு நல அலுவலர் ரியாஸ் அகமது பாஷா உட்பட்ட பலர் உடனிருந்தனர்.



■ சிவகங்கை மாவட்டம், உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித்.இ.ஆ.ப., அவர்கள், இளையான்குடி வட்டாரத்திற்குட்பட்ட தனியார் மஹாலில், வேளாண்மைத்துறையின் சார்பில் பல்வேறு வகையான வேளாண் இடுபொருட்களை விவசாயிகளுக்கு வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி கா.வானதி உட்பட அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் பலர் உள்ளனர்.



■ விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டத்தில், "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் மூலம் நடைபெற்று வரும் பல்வேறு அரசுத்துறை அலுவலர்களின் ஆய்வுப் பணிகளில் இரண்டாம் நாளான மேலக்காந்தி நகர் பகுதியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ், செயல்பட்டு வரும் சமையலறை பகுதியனை பார்வையிட்டு, அங்கு மாணவர்களுக்கு தயார் செய்யப்பட்டுள்ள காலை உணவினை உட்கொண்டு, உணவின் தரம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன்,இ.ஆ.ப., அவர்கள ஆய்வு செய்தார்.



■ விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டாரத்திற்கு உட்பட்ட வச்சகாரப்பட்டி ஊராட்சியில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரம் இயக்கம் சார்பில், சுய உதவிக்குழுக்களுக்கு இந்தியன் வங்கி மூலமாக ரூ.76.36 ஆயிரம் வங்கிக்கடன் இணைப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

# அமைதியை சீர்குலைக்கும் 'புற்றுநோய் போன்ற நாடு' இஸ்ரேல்: வட கொரியாவின் ஈரான் ஆதரவுக் குரல்

தெஹ்ரான், ஜூன்.20-

ஈரான் மீதான இஸ்ரேலின் சமீபத்திய வான்வழித் தாக்குதலை "கொடூரமான ஆக்கிரமிப்புச் செயல்" என்று வட கொரியா கண்டித்துள்ளது. இது மேற்கு ஆசியாவில் மிகப் பெரிய போரை ஏற்படுத்தும் அபாயம் இருப்பதாகவும் வடகொரியா எச்சரித்துள்ளது.

இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான தீவிரமான போர் இன்று ஏழாவது நாளை எட்டியது. இந்த நிலையில், வடகொரிய அரசு நடத்தும் செய்தி நிறுவனமான கேசிஎன்ஏ (ரிசிழிகி) வெளியிட்ட அறிக்கையை மேற்கோள் காட்டியுள்ள யோன்ஹாப் நாளிதழின் செய்தியில், அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளின் ஆதரவுடன் செயல்படும் இஸ்ரேல், மேற்கு ஆசியாவில் அமைதியை சீர்குலைக்கும் 'புற்றுநோய் போன்ற நாடு' என்று தெரிவித்துள்ளது.

கேசிஎன்ஏ தனது அறிக்கையில், 'வட கொரிய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர், ஈரானுக்கு எதிரான இஸ்ரேலின் ராணுவத் தாக்குதல் குறித்து கடுமையான கவலைகளை எழுப்பினார். மேற்கு ஆசியாவில் முழுமையான போரின் அபாயத்தை இஸ்ரேல் எழுப்பியதற்காக கண்டனம் தெரிவித்தார் ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதல் ஒரு நாட்டின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை மீறுவதாகவும், இது "மனிதகுலத்துக்கு எதிரான மன்னிக்க முடியாத குற்றம்" என்றும் செய்தித் தொடர்பாளர் கூறினார்.

மேலும், அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளால் ஆதரிக்கப்படும் இஸ்ரேல், மத்திய கிழக்கில் அமைதியை சீர்குலைக்கும் புற்றுநோய் போன்ற அமைப்பாகவும், உலகளாவிய அமைதி மற்றும் பாதுகாப்பை அழிப்பதில் முக்கிய குற்றவாளியாகவும் இருப்பதை



தெளிவாக நிரூபிக்கிறது என்று வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் கூறினார்' என்று தெரிவித்துள்ளது.

1973ல் ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திய வட கொரியாவும் ஈரானும் தங்கள் ஆயுதத் திட்டங்களுக்காக நெருங்கிய உறவுகளைக் கொண்டிருப்பதாக அறியப்படுகிறது என்றும், வடகொரியா மற்றும் ஈரான் ஆகியவை உக்ரைனுக்கு எதிரான அதன் போரை ஆதரிக்க ரஷ்யாவுக்கு ஆயுதங்களை வழங்கியுள்ளன என்றும் யோன்ஹாப் தெரிவித்துள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், ஈரானுடனான தனது பொறுமை ஏற்கெனவே முடிந்துவிட்டது என்று கூறிய நிலையில், வட கொரியா இத்தகைய கண்டனத்தை தெரிவித்துள்ளது.

முன்னதாக, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு புதன்கிழமை ஒரு தொலைக்காட்சி அறிக்கையில், இஸ்ரேலின் வான்வெளியைப் பாதுகாப்பதில் அமெரிக்க அதிபர் ட்ரம்பின் ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார். ஈரானை மிகப் பெரிய சக்தியுடன் இஸ்ரேல் தாக்கி வருவதாகவும், அதே நேரத்தில் போரில் இஸ்ரேல் வேதனையான இழப்புகளை சந்தித்ததை ஒப்புக்கொள்வதாகவும் அவர் கூறினார்.

இதற்கிடையில், அமெரிக்க அதிபர் ட்ரம்ப் புதன்கிழமை செய்தியாளர்களிடம் கூறுகையில், "ஈரானிய அணுசக்தி நிலையத்தின் மீது வான்வழித் தாக்குதலை நடத்தலாமா வேண்டாமா என்பது குறித்து நான் இன்னும் முடிவு செய்யவில்லை. நான் அதைச் செய்யலாம், நான் அதைச் செய்யாமலும் இருக்கலாம். நான் என்ன செய்யப் போகிறேன் என்று யாருக்கும் தெரியாது. எதுவும் தாமதமாகவில்லை, ஈரானுக்கு நிறைய பிரச்சினைகள் உள்ளன. அது முடியும் வரை எதுவும் முடிவடையாது" என்றார்.





## பழனியில் ராகுல் காந்தி பிறந்த நாளை முன்னிட்டு ரத்ததானம் வழங்கப்பட்டது

திண்டுக்கல், ஜூன்.20-


திண்டுக்கல் மாவட்டம் பழனியில் ராகுல் காந்தியின் பிறந்தநாளை முன்னிட்டு, இளைஞர் காங்கிரஸ் சார்பில் பழனி அரசு மருத்துவமனையில் இளைஞர் காங்கிரஸ் நகர தலைவர் பாலகுமார் தலைமையில் பிறந்த குழந்தைகளுக்கு பரிசுப் பெட்டிகள், பழங்கள் மற்றும் பிரெட் வழங்கப்பட்டது. அதை தொடர்ந்து இளைஞர் காங்கிரஸ் மாவட்ட பொது செயலாளர் அபுல் கலாம் சர்தார் மாவட்ட பொது செயலாளர்,

அபீப் ரகுமான் வட்டாரத் தலைவர், ஆசிக் ராஜா, சட்டமன்றத் தொகுதி தலைவர், முகம்மது முஸ்பர் நகர துணைத் தலைவர் அவர்கள் அனைவரும் இரத்த தானம் செய்தனர். இந்நிகழ்ச்சியில் பழனி சட்டமன்ற பொறுப்பாளர் முத்துச்சாமி, முன்னாள் கவுன்சிலர் சுந்தர்,நகரத் தலைவர் முத்து விஜயன், மண்டல தலைவர் வீரமணி, மாவட்ட துணை தலைவர் முருகானந்தம், மாவட்ட செயலாளர் ராமநாத கிருஷ்ணன், ஆயக்குடி காங்கிரஸ் தலைவர் வழக்கறிஞர்.கவிமணி, வட்டார தலைவர் ராமராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நீர்நிலை ஆக்கிரமிப்புகளுக்கு மின்சாரம், குடிநீர் இணைப்பு கொடுத்தது எப்படி? ஐகோர்ட் கேள்வி

சென்னை, ஜூன்.20-

நீர்நிலையை ஆக்கிரமித்து கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு கொடுத்தது எப்படி என விளக்கம் அளிக்க தாம்பரம் மாநகராட்சி ஆணையர், மின்சார வாரியத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட நன்மங்கலம் ஏரியை ஆக்கிரமித்து அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளதாகவும், இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரி அந்த பகுதியைச் சேர்ந்த ராமசந்திரன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். ஆக்கிரமிப்பை அகற்றக் கோரி அளித்த கோரிக்கை மனுவுக்கு பதிலளித்த அரசு, ஆக்கிரமிப்புகள் இருப்பதாக ஒப்புக்கொண்டபோதும், அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கவில்லை எனவும், ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவிட வேண்டும் எனவும் அந்த மனுவில் கோரப்பட்டது.


இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி ஸ்ரீராம் மற்றும் நீதிபதி சுந்தர் மோகன் அமர்வு, ஆக்கிரமிப்புகள் இருப்பதை ஒப்புக்கொண்ட அதிகாரிகள் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்காததில் இருந்து, ஆக்கிரமிப்பாளர்களுடன் அதிகாரிகளும் கைகோத்து செயல்படுவதாக தோன்றுகிறது என தெரிவித்தது.

மேலும், வழக்கில் நீர்வளத் துறை செயலாளரையும், தாம்பரம் மாநகராட்சி ஆணையரையும், மின்சார வாரிய தலைவரையும் தாமாக முன்வந்து எதிர்மனுதாரராக சேர்த்த நீதிபதிகள், நீர்நிலையை ஆக்கிரமித்து கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு மின் இணைப்பு வழங்கியது எப்படி, குடிநீர் இணைப்பு வழங்கியது எப்படி என அறிக்கை தாக்கல் செய்யும்படி உத்தரவிட்டு, விசாரணையை ஜூலை 17ஆம் தேதிக்கு தள்ளி வைத்தனர்.

## கிருஷ்ணராஜ சாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு: தமிழகத்துக்கு 9,875 கன அடி நீர் திறப்பு

பெங்களூரு, ஜூன்.20-

கர்நாடகாவில் காவிரி ஆறு உற்பத்தியாகும் குடகு மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக கன மழை பெய்து வருகிறது. நேற்று மாலை 5 மணி வரை தொடர்ந்த கனமழையால் காவிரி, கன்னிகா ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.



குடகில் பெய்துவரும் கனமழையால் கிருஷ்ணராஜசாகர் அணைக்கு நீர்வரத்து 29 ஆயிரத்து 369 கன அடியாக அதிகரித்தது. இதேபோல ஹாரங்கி அணைக்கு 3 ஆயிரத்து 810 கன அடி நீரும், ஹேமாவதி அணைக்கு 5 ஆயிரத்து 445 கன அடி நீரும் வந்து கொண்டிருக்கிறது. காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேபோல கேரள மாநிலம் வயநாட்டில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் மைசூருவில் உள்ள கபினி அணைக்கு வினாடிக்கு 21 ஆயிரத்து 579 கன அடி நீர் வந்து கொண்டிருப்பதாக காவிரி நீர்ப்பாசன கழகம் தெரிவித்துள்ளது.

கர்நாடகாவில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடரும் மழை காரணமாக கிருஷ்ணராஜ சாகர், கபினி உள்ளிட்ட 4 அணைகளும் வேகமாக நிரம்பி வருகின்றன. இதனால் கபினி அணையில் இருந்து தமிழகத்துக்கு வினாடிக்கு 9 ஆயிரத்து 875 கன அடி நீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

## எலான் மஸ்க்கின் ஸ்பேஸ்எக்ஸ் ஸ்டார்ஷிப் விண்கலம் வெடித்துச் சிதறியது நடந்தது என்ன?

டெக்சாஸ், ஜூன்.20-

டெக்சாஸின் மாஸியில் உள்ள எலான் மஸ்க்கின் ஸ்பேஸ்எக்ஸ் சோதனைத் தளத்தில் ஒரு சக்திவாய்ந்த வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. ஸ்பேஸ் எக்ஸ் ஸ்டார்ஷிப் விண்கலம் தீ பரிசோதனையின்போது வெடித்துச் சிதறியது.

ஸ்டார்ஷிப் விண்கலத்தின் இயந்திரங்களில் இன்று வழக்கமான தீ பரிசோதனை நடத்தப்பட்டது. அப் போது ராக்கெட்டின் அடிப்பகுதியில் இருந்து ஒரு சக்திவாய்ந்த வெடிப்பு ஏற்பட்டு, சுற்றியுள்ள பகுதிகள் தீப்பிழம்புகள் மற்றும் புகையால் சூழ்ந்தது. இந்த விபத்தானது ஸ்டார்ஷிப் திட்டத்துக்கு குறிப்பிடத்தக்க பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. மேலும், இதனால் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் தனது அனைத்து விண்கல தயாரிப்புகளையும் காலவரையின்றி நிறுத்தி வைக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

வரும் ஜூன் 29 அன்று ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் தனது ஸ்டார்ஷிப் விண்கலத்தை இயக்குவதை இலக்காகக் கொண்டிருந்தது. இது உலகின் மிகப் பெரிய மற்றும் மிகவும் சக்திவாய்ந்த ராக்கெட் அமைப்பின் 10வது சோதனையாகும்.

இந்த நிலையில், தற்போது ஏற்பட்டுள்ள இந்த பின்னடைவு 2025ம் ஆண்டில் ஸ்பேஸ்எக்ஸின் ஸ்டார்ஷிப் திட்டத்ததுக்கான மூன்றாவது தோல்வியாக மாறியுள்ளது. முன்னதாக, இந்த ஆண்டின் தொடக்கத்தில், இரண்டு ஸ்டார்ஷிப் சோதனை விண்கலன்கள் ஏவப்பட்ட சிறிது நேரத்திலேயே வெடித்துச் சிதறின. ஒரு விண்கலம் கரீபியனில் விழுந்தது, மற்றொன்று கட்டுப்பாட்டை இழந்து அட்லாண்டிக் பெருங்கடலில் விழுந்து உடைந்தது.

நிலவுக்குச் செல்லும் பயணங்களுக்கான திட்டங்களுடனும், செவ்வாய் கிரகத்துக்கான பயணத் திட்டங்களுடனும், மனிதர்களை விண்வெளிக்கு அழைத்துச் செல்லும் எலான் மஸ்க்கின் நோக்கத்துக்கான நம்பிக்கையாக ஸ்பேஸ் எக்ஸின் ஸ்டார்ஷிப் உள்ளது என்பதும் கவனிக்கத்தக்கது.

தற்போதைய பின்னடைவு குறித்து கருத்து தெரிவித்துள்ள ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம், 'மீண்டும் மீண்டும் பின்னடைவுகள் இருந்தபோதிலும், நிறுவனம் விரைவான வளர்ச்சி மற்றும் தொடர்ச்சியான சோதனைகளுடன் முன்னேறியுள்ளது. நாங்கள் ஒவ்வொரு தோல்வியையும் ஒரு கற்றல் வாய்ப்பாக கருதுகிறோம். இந்த வெடிப்புச் சம்பவம், புதிய விண்வெளி தொழில்நுட்பங்களை உருவாக்குவதில் உள்ளார்ந்த அபாயங்களைக் காட்டினாலும், ஸ்டார்ஷிப்பின் இறுதி வெற்றி விண்வெளிப் பயணத்தில் புரட்சியை ஏற்படுத்தும். பூமிக்கு அப்பால் மனிதர்களையும் சரக்குகளையும் கொண்டு செல்லக்கூடிய விண்கலத்தை உருவாக்குவோம்' என்று தெரிவித்தது.



## பிஹாரில் குழந்தை திருமணம் சிறுமிக்கு பாதுகாப்பு அளிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி, ஜூன்.20-

பிஹார் மாநிலத்தைச் சேர்ந்த 16 வயது சிறுமி ஒருவருக்கு 33 வயதான சிவில் காண்டிராக்டர் ஒருவருடன் கடந்த ஆண்டு டிசம்பர் 9ம் தேதி திருமணம் நடந்துள்ளது. இந்நிலையில் தனது தாய்மாமன் உதவியுடன் தாய் வீட்டுக்கு அந்த சிறுமி 10ம் வகுப்பு தேர்வு எழுத வந்திருந்தார். தேர்வு முடிந்த பின்னர் கணவர் வீட்டுக்கு அவர் செல்லவில்லை.

இந்நிலையில் கணவர் வீட்டில் தன்னை கொடுமைப்படுத்துகிறார்கள் என்று கூறி, தனது நண்பர் ஒருவருடன் வீட்டை விட்டுத் தப்பிச் சென்றுவிட்டார். இந்நிலையில் தனக்கு பாது காப்பு அளிக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் அவர் வழக்கு தொடர்ந்தார். இந்த மனு நீதிபதிகள் உஜ்ஜால் புய்யான், மன்மோகன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

மனுவை விசாரித்த நீதிபதிகள் கூறியதாவது: 16 வயதான சிறுமியை கட்டாயப்படுத்தி 33 வயதான நபருடன் திருமணம் செய்து வைத்துள்ளனர். அவரது நண்பர் மீது சிறுமி கடத்தல் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சிறுமியைக் கொல்வேன் என்று கணவர் பகிரங்கமாக மிரட்டல் விடுத்துள்ளார்.

எனவே, அவரது கணவர் வீட்டாரிடமிருந்து, சிறுமிக்கும், அவரது நண்பருக்கும் பாது காப்பை பிஹார் போலீஸார் வழங்கவேண்டும். வரும் 9ம் தேதி இதுதொடர்பாக விசாரணை நடத்த முழுவிவரங்களையும் ஆவணமாகத் தயாரித்து சீலிட்ட உறையில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

## மகேந்திரகிரி இஸ்ரோ மையத்தில் விகாஸ் இன்ஜின் சோதனை வெற்றி

திருநெல்வேலி, ஜூன்.20-

திருநெல்வேலி மாவட்டம் மகேந்தி ரகிரியில் உள்ள இஸ்ரோவின் திரவ இயக்க உந்தும வளாகத்தில் ராக்கெட்டில் பொருத்தக்கூடிய விகாஸ் இன்ஜின் சோதனை வெற்றிகரமாக நடைபெற்றது. ககன்யான் விண்கலத்தில் 4 விஞ்ஞானிகளை விண்வெளிக்கு அனுப்பி 400 கி.மீ உயரத்தில் விண்கலத்தை நிலைநிறுத்தி ஆய்வு செய்யும் திட்டத்தை இஸ்ரோ செயல்படுத்தி வருகிறது. ககன்யான் திட்டத்துக்கான ராக்கெட்டில் பொருத்தக்கூடிய இன்ஜின்கள் சோதனையும் இஸ்ரோ மையங்களில் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக ராக்கெட்டில் பொருத்தக்கூடிய கிரையோஜனிக் இன்ஜின், செமி கிரையோஜனிக் இன்ஜின், விகாஸ் இன்ஜின் சோதனைகள் நடைபெற்று வருகின்றன.

மகேந்திரகிரியில் உள்ள இஸ்ரோவின் திரவ இயக்க உந்தும வளாகத்தில் திரவ எரிபொருளைக் கொண்டு இயக்கக்கூடிய மேம்படுத்தப்பட்ட விகாஸ் இன்ஜின் சோதனை நடைபெற்றது.

இந்த சோதனை 17 விநாடிகள் வெற்றிகரமாக நடைபெற்றதாகவும், இந்த இன்ஜினை பிஎஸ்எல்வி மற்றும் ஜிஎஸ்எல்வி ராக்கெட்டுகளில் பயன்படுத்தலாம் எனவும் இஸ்ரோ வட்டாரங்கள் தெரிவித்தன.



■ கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.ஹனீஷ் சாப்ரா, இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, தலைமையில் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வட்டவிளை நியாயவிலைக்கடையினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் திரு.நிஷாந்த கிருஷ்ணா, இ.ஆ.ப., உட்பட பலர் உள்ளார்கள்.



## மேலூர் அருகே மீன்பிடி திருவிழாவில் வலைகளில் பாம்புகள் சிக்கியதால் பரபரப்பு

மேலூர், ஜூன்.20-

மதுரை மாவட்டம், மேலூர் அருகே செமினிப்பட்டியில் ஆண்டிபாலகர் மற்றும் உச்சிமாகாளியம்மன் கோயில் அருகில் உள்ளது செம்மணி கண்மாய். நெல் அறுவடைக்கு பிறகு கண்மாயில் உள்ள நீரில் மீன்கள் விடப்பட்டு வளர்க்கப்படும். பின்னர் பாரம்பரிய முறைப்படி இந்த மீன்களை பிடிக்கும் திருவிழா ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறுவது வழக்கம். அதன்படி, இந்த ஆண்டுக்கான திருவிழா இன்று நடைபெற்றது. இன்று காலை கிராம பெரியவர்கள் துண்டு வீச, கண்மாயை சுற்றி நின்ற ஆயிரக்கணக்கான கிராம மக்கள் ஒரு சேர கண்மாயில் இறங்கினர். தாங்கள் கொண்டு வந்த வலை, கச்சா, ஊத்தா கூடை உள்ளிட்ட பல்வேறு உபகரணங்களை கொண்டு போட்டிபோட்டு மீன்களை பிடிக்க ஆரம்பித்தனர். இதில் நாட்டுவகை மீன்களான கட்லா, ரோகு, கெழுத்தி, கெண்டை, குரவை போன்ற மீன்கள் சிறியது முதல் பெரியது வரை பிடிபட்டது. அதே நேரத்தில் மீன்களுக்கு சமமாக வலைகளில் பாம்புகளும் சிக்கியதால் பரபரப்பு ஏற்பட்டது. பாம்புகளை பார்த்து பலர் வலைகளை நழுவ விட்டனர்.

சிலர் பயப்படாமல் பாம்புகளை தூக்கி வீசி விட்டு மீன்களை பிடிப்பதில் ஆர்வம் காட்டினர். மீன்பிடி திருவிழா நடைபெற்றால் அடுத்த ஆண்டு விவசாயம் செழிக்கும் என்பது கிராம மக்களின் நம்பிக்கையாக உள்ளது. மேலும் மீன்பிடி திருவிழாவில் கிடைக்கும் மீன்களை விற்பனை செய்யக் கூடாது. அதனால் அனைவரும் மீன்களை வீடுகளுக்கு கொண்டு சென்று சமையல் செய்து வழிபாடு செய்து சாப்பிட்டனர். இதனால் அந்தப் பகுதி மீன்குழம்பு வாசம் கமகமத்தது.

## பொள்ளாச்சி அருகே மக்களை மிரட்டும் ஒற்றை யானை

பொள்ளாச்சி, ஜூன்.20-

கோவை மாவட்டம் பொள்ளாச்சியை அடுத்த ஆழியார் மற்றும் நவமலை பகுதியில் அவ்வப்போது அடர்ந்த வனத்திலிருந்து யானைகள் இடம் பெயர்கிறது. இதில் கடந்த சில வாரமாக, தண்ணீர் குடிக்க ஆழியார் அணை நோக்கி யானைகள் கூட்டமாக வந்து சென்றது. தற்போது மழையால், யானை நடமாட்டம் குறைந்தது. இருப்பினும், நவமலை பகுதியில் சுற்றித்திரியும் ஒற்றை காட்டுயானை தற்போது நவமலையில் இருந்து வால்பாறை மலைப்பாதை வரை ரோட்டில் அடிக்கடி உலா வருகிறது.

தற்போது கவியருவியில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால் சுற்றுலா பயணிகள் வர தடை விதிக்கப்பட்டு உள்ளது. இதனால் அப்பகுதியில் ஒற்றை யானை உலா வருகிறது. நேற்று, நவமலை ரோட்டில் வால்பாறை மலைப்பாதை வரை உலா வந்த ஒற்றை காட்டு யானை அங்கு உணவு தேடியது. தொடர்ந்து கவியருவி செல்லும் சாலையில் சாவகாசமாக நின்று சென்றது. நவமலைரோடு வழியாக வால்பாறை மலைப்பாதையில் அடிக்கடி ஒற்றை யானை நடமாட்டம் இருப்பதால், சுற்றுலாதளங்களில் யானை வருவதை தடுக்க கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டு உள்ளதாக வனத்துறையினர் தெரிவித்தனர்.





## 100 நாள் வேலை திட்டம் புறக்கணிப்பு காளையார் கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை முற்றுகையிட்ட கிராம மக்கள்

சிவகங்கை, ஜூன்.20-

கிராம சபை கூட்டத்தில் கணக்கு அறிக்கை கேட்டதால் நான்கு கிராமம் மக்களுக்கு 100 நாள் வேலை சேர்க்காமல் புறக்கணித்ததாக கூறி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு நிலவியதுசிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை 100.க்கும் மேற்பட்ட கிராம மக்கள் முற்றுகையிட்டதால் பரபரப்பானது காளையார் கோவில் அருகே உள்ள அச்சங்குடி, சாக்கூர் கொத்தமங்கலம், அஞ்சுகாவயல் உள்ளிட்ட கிராமம் மக்களுக்கு 100 நாள் வேலைத்திட்டத்தை கொடுக்காமல் இருப்பதை கண்டித்தும் கிராம சபை கூட்டத்தில் கணக்கு வழக்கு கேள்வி கேட்டதற்கு கிராமத்தை புறக்கணிப்பதாக கூறி காளையர்களில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ளே உட்கார்ந்து போராட்டத்தில் கிராம மக்கள் போராட்டத்தை ஈடுபட்டனர் பின்னர் வட்டார வளர்ச்சி அதிகாரிகள் கிராம மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர் உடனடியாக சம்பந்தப்பட்ட கிராம மக்களுக்கு 100 நாள் வேலை திட்டத்தை வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தனர் மக்கள் நல பணியாளர் உடனடியாக நியமிக்க வேண்டும் மீண்டும் 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தை வழங்க மறுத்தால் குடும்ப அட்டையை ஒப்படைக்கும் போராட்டத்தை ஈடுபடுவதாக கிராம மக்கள் தெரிவித்தனர்






### வழிப்பறி செய்து இளைஞரை தள்ளிவிட்டு கொலை செய்தவருக்கு சிறை தண்டனை: ஆய்வாளருக்கு ஆணையர் பாராட்டு

சென்னை, ஜூன்.20-

பணத்தை பறித்ததோடு, அரசுப் பேருந்தில் தள்ளிவிட்டு இளைஞர் கொலை செய்யப்பட்ட வழக்கில் வழிப்பறி கொள்ளையனுக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றுக் கொடுத்த காவல் ஆய்வாளரை, காவல் ஆணையர் அருண் நேற்று நேரில் அழைத்து பாராட்டினார்.

எழும்பூர், பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள தனியார் ஓட்டல் கேட்டின் முன்பு கடந்த 2018 அக்டோபர் 14ம் தேதி சாலையில் 25 வயது இளைஞர் ஒருவர் நடந்து சென்றார். அப்போது, அவரை வழிப்பறி கொள்ளையர்கள் இருவர் வழிமறித்து தாக்கி அவரின் பாக்கெட்டிலிருந்த பணத்தை பறித்துவிட்டு அடித்து தள்ளினர். அப்போது அந்த வழியாக வந்த மாநகரப் பேருந்து சக்கரத்தில் சிக்கி சம்பந்தப்பட்ட இளைஞர் உயிரிழந்தார்.

இது தொடர்பாக எழும்பூர் காவல் ஆய்வாளராக இருந்த கருணாகரன் தலைமையிலான போலீஸார், ஆதாய கொலை உள்ளிட்ட மேலும் சில பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிந்து விசாரித்தனர். முதல் கட்டமாக இந்த வழக்கு தொடர்பாக கமல் என்ற மதுரை முத்து (28) என்பவர் கூட்டாளியுடன் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கு விசாரணை அல்லிக்குளம் வளாகத்தில் உள்ள 21 வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

10 ஆண்டு கடுங்காவல்: இந்நிலையில், இந்த வழக்கு தொடர்பான தீர்ப்பு கடந்த 16ம் தேதி பிறப்பிக்கப்பட்டது. இதில் குற்றச்சாட்டுக்கு உள்ளான மதுரை முத்துவுக்கு 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை மற்றும் ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது. மற்றொருவர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில், வழிப்பறி கொள்ளையனுக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றுக் கொடுத்த காவல் ஆய்வாளர் கருணாகரனை காவல் ஆணையர் அருண் நேற்று நேரில் அழைத்து பாராட்டி வெகுமதி வழங்கினார்.



## மதுரையில் முருக பக்தர்கள் மாநாட்டு திடலில் மாதிரி அறுபடை வீடுகளில் வேல் பிரதிஷ்டை

மதுரை, ஜூன்.20-

முருகனின் அறுபடை வீடுகளில் பூஜை செய்து எடுத்து வரப்பட்ட வேல் மதுரையில் அமைக்கப் பட்டுள்ள மாதிரி அறுபடை வீடுகளில் பிரதிஷ்டை செய்யப் பட்டது. மதுரை பாண்டிகோயில் அருகே அம்மா திடலில் இந்து முன்னணி சார்பில் 22ம் தேதி முருக பக்தர்கள் மாநாடு நடைபெறுகிறது. இதையொட்டி மாநாட்டு வளாகத்தில் முருகனின் அறுபடை வீடுகளின் மாதிரி கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு பூஜைகள் செய்யப்பட்டு பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்படுகிறது.

நீண்ட வரிசையில் காத்திருப்பு: மதுரையில் ஒரே இடத்தில் அமைக்கப்பட்டுள்ள அறுபடை வீடுகளின் மாதிரியை தரிசிக்க மதுரை உட்பட பல்வேறு மாவட்டங்களிலிருந்து பக்தர்கள் வருகின்றனர். நேற்று பக்தர்களின் கூட்டம் அதிகமாக இருந்தது. பலர் குடும்பத்துடன் வந்து நீண்ட வரிசையில் காத்திருந்து அறுபடை முருகனை தரிசித்தனர். நேற்று வேல் பிரதிஷ்டை நடைபெற்றது.

முன்னதாக, வைகாசி விசாக தினத்தில் பூஜை செய்யப்பட்ட வேலை விவசாயிகள், தொழிலாளர்கள், குறவர் சமூக மக்கள், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள், கலைஞர்கள் குழுவினர் ஊர்வலமாக எடுத்து வந்தனர். அந்த வேல் பூஜை செய்யப்பட்டு மூலவர் சிலை அருகே பிரதிஷ்டை செய்யப்பட்டது. அப்போது முருக பக்தர்கள், பொதுமக்கள் அரோகரா கோஷம் எழுப்பினர்.

பின்னர் பக்தர்கள் ஒரே நேரத்தில் கந்த சஷ்டி கவசம் பாடினர். இந்த நிகழ்ச்சியில் இந்து முன்னணி தென் பாரத அமைப்பாளர் பக்தவச்சலம், தமிழக அமைப்பாளர் ராஜேஷ், பொதுச் செயலாளர் முருகானந்தம், பாஜக மாநில பொதுச் செயலாளர் ராம.சீனிவாசன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## ஆன்லைன் மோசடிகள் மூலம் கடந்த 5 மாதத்தில் சென்னையில் 4,357 பேரிடம் ரூ.218 கோடி பணம் பறிப்பு: சைபர் குற்றவாளிகளின் வங்கி கணக்குகளில் ரூ.48 கோடி முடக்கம்

சென்னை, ஜூன்.20-

சென்னை பெருநகர காவல் எல்லையில் ஆன்லைன் மூலம் பொதுமக்களிடம் பல்வேறு வகையில் சைபர் குற்றவாளிகள் பணம் பறித்து வருகின்றனர். இதுபோன்ற ஆன்லைன் குற்றங்களை தடுக்க போலீஸ் கமிஷனர் அருண் உத்தரவுப்படி மத்திய குற்றப்பிரிவில் சைபர் குற்றப்பிரிவு மற்றும் 4 மண்டலங்களில் சைபர் குற்றப்பிரிவு காவல் நிலையங்கள் இயங்கி வருகிறது. மேலும், 12 காவல் மாவட்டங்களில் சைபர் குற்ற குழுக்கள் தேசிய சைபர் குற்றப்புகார் போர்ட்டலில் நிதி சைபர் குற்றங்களை உடனடியாக பதிவு செய்தல், மோசடி வங்கி கணக்குகளை உடனடியாக முடக்குதல், நீதிமன்ற உத்தரவுகளின்




அடிப்படையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முடக்கப்பட்ட தொகையை திரும்ப பெறுதல் மற்றும் சைபர் குற்ற வழக்குகளில் குற்றம் சட்டப்பட்டவர்களை கைது செய்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர். அந்த வகையில் ஆன்லைன் வர்த்தக மோசடி, டிஜிட்டல் கைது மோசடி, ஆன்லைன் பகுதி நேரம் வேலை மோசடி, கிரிப்டோகரன்சி மாசடி, வாட்ஸ் அப் ஹேக்கிங் மோசடிகள் தற்போது அதிகளவில் நடந்த வருகிறது.

அதன்படி சென்னை பெருநகர காவல் எல்லையில் கடந்த ஜனவரி 1ம் தேதி முதல் மே 31ம் தேதி வரையிலான காலத்தில் பல்வேறு ஆன்லைன் மோசடிகளில் பணத்தை இழந்ததாக 4,357 புகார்கள் வந்துள்ளது. அந்த புகார்களின் படி மொத்தம் ரூ.218.45 கோடி பணத்தை இழந்துள்ளனர். சென்னை சைபர் க்ரைம் போலீசார் எடுத்த முயற்சியால் புகார் அளித்து பணத்தை இழந்தவர்களுக்கு கடந்த 5 மாதத்தில் ரூ.10.45 கோடி திரும்ப பெற்று தரப்பட்டுள்ளது. சைபர் குற்றங்களில் ஈடுபட்டதாக கடந்த 5 மாதங்களில் 17 வெளிமாநிலத்தவர் உட்பட மொத்தம் 59 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் வங்கி கணக்குகளில் இருந்து பணத்தை பரிவர்த்தனை செய்யாதப்படி ரூ.48 கோடி பணம் முடக்கி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதே காலகட்டத்தில் கடந்த ஆண்டு 2024 ஜனவரி 1 முதல் மே 31ம் தேதி வரையிலான காலத்தில் 3,888 பேரிடம் சைபர் குற்றவாளிகள் ரூ.182 கோடி பணம் பறித்துள்ளனர். எனவே ஆன்லைன் மோசடி நபர்களிடம் பணத்தை இழக்கும் நபர்கள் 'கோல்டல் ஹவர்' என்று சொல்லக்கூடிய சைபர் குற்றம் நடந்த உடனடியாகவும் மிக விரைவாகவும் நிதி இழப்பு தொடர்பான புகார்கள் அளித்தால் அவர்களின் பணத்தை சைபர் க்ரைம் போலீசார் முடக்கி மீண்டும் பணத்தை திரும்ப பெற நவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும். எனவே ஆன்லைன் மோசடிகளில் பணத்தை இழக்கும் நபர்கள் உடனடியாக '1930' என்ற எண்ணில் புகார் அளிக்க வேண்டும் என்று சென்னை பெருநகர காவல்துறை சார்பில் பொதுமக்களுக்கு வேண்டுகொள் விடுத்துள்ளனர்.

## 'நான் என்ன செய்வேன் என்று யாருக்கும் தெரியாது' ஈரானுக்கு எதிரான ராணுவ நடவடிக்கை குறித்து ட்ரம்ப்

வாஷிங்டன், ஜூன்.20-

இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான மோதலில் ஈரானுக்கு எதிராக அமெரிக்க ராணுவம் களமிறங்குமா என்ற கேள்விக்கு அமெரிக்க அதிபர் டொனல்டு ட்ரம்ப் பதில் அளித்துள்ளார்.

கடந்த 13ம் தேதி ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதலை மேற்கொண்டது. அணுகுண்டு தயாரிப்பில் தீவிரம் காட்டுவதாக கூறி 'ஆபரேஷன் ரைசிங் லயன்' என்ற பெயரில் இந்த தாக்குதலை இஸ்ரேல் முன்னெடுத்தது. இதற்கு ஈரானும் பதில் தாக்குதல் நடத்தியது. ஈரானுக்கு ஆதரவாக ஹவுதி கிளர்ச்சி படை உள்ளது.



இஸ்ரேல் ஈரான் மோதல் குறித்த அமெரிக்க அதிபர் டொனல்டு ட்ரம்ப் தொடர்ந்து தனது கருத்தை தெரிவித்து வந்தார். இந்நிலையில், ஈரானுக்கு எதிராக அமெரிக்க ராணுவம் களமிறங்குமா என பத்திரிகையாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர்.

"அதை நான் செய்யலாம். செய்யாமலும் போகலாம். ஆனால், நான் என்ன செய்வேன் என்று யாருக்கும் தெரியாது. நான் அந்த கேள்விக்கு பதில் அளிப்பேன் என நீங்கள் எண்ணியிருக்க வாய்ப்பு இல்லை.

ஈரானுக்கு நிறைய பிரச்சினைகள் எழுந்துள்ளன. அவர்கள் எங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முயற்சித்தார்கள். நீங்கள் ஏன் இரண்டு வாரத்துக்கு முன்பு இதை செய்யவில்லை என கேட்டேன். நீங்கள் அதை செய்திருக்கலாம். உங்கள் தேசம் இருந்திருக்கும் என சொன்னேன்" என சிரித்தபடி ட்ரம்ப் தெரிவித்தார்.

அவரது இந்த கருத்து மூலம் அமெரிக்க ராணுவம் ஈரானுக்கு எதிராக களம் இறங்குமா? இறங்காதா? என்ற யூகத்தை உலக நாடுகளின் இடையே எழுப்பியுள்ளார் ட்ரம்ப்.





# கீழக்கோட்டையில் யாவரும் கேளீர் அணிகள் துவக்க விழா

காளையார் கோயில், ஜூன்.20-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டையில் யாவரும் கேளீர் அணிகளின் துவக்க விழா சிறப்பாக நடைபெற்றது. தலைமை ஆசிரியை தெய்வானை தலைமை வகித்தார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி முன்னிலை வகித்தார். கணிதப்பட்டதாரி ஆசிரியை மீனாட்சி வரவேற்புரையாற்றினார். பழுப்பு செவ்வூதா இளஞ் சிவப்பு வான நீலம் ஆகிய வண்ணங்களில் அணிகள் பிரிக்கப்பட்டு தலைவர்கள் நியமிக்கப்பட்டனர். பள்ளியின் அனைத்து செயல்பாடுகளையும் சிறப்பாக செய்திட அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். சுற்றுச்சூழல் மன்றம் சார்பாக அணிகள் வாரியாகவும் எட்டாம் வகுப்பு மாணவர்களின் தாயார்கள் இணைந்து அவர்கள் பெயராலேயே மரம் நடும் விழாவும் சிறப்பாக நடைபெற்றது. பெற்றோர்கள் மரக்கன்றுகள் நட்டு மகிழ்ச்சி அடைந்தனர். நிஷா வாய்ஸ் பவுண்டேஷன் நிறுவனர் கிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பெற்றோர்களுக்கு மஞ்சள் பை வழங்கி சிறப்பித்தார். ஆசிரியை வாசுகி நன்றி கூறினார். ஆசிரியை கமலம் பாய் கணினி பயிற்றுநர் வித்யா சத்துணவு சமையல் உதவியாளர் அஞ்சலை கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



■ சிவகங்கை மாவட்டம். உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆஷா அஜித், இ.ஆ.ப., அவர்கள், இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட தெற்கு கீரனூர் ஊராட்சிக்குட்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் பால் கொள்முதல் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

# குரோம்பேட்டை சங்கரா முதியோர் இல்லத்தில் ஜீ தமிழ் சரிகம பா பாடகர்களின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது

குரோம்பேட்டை, ஜூன்.20-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டை பகுதியில் செயல்பட்டு வரும் சங்கரா முதியோர் இல்லத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட முதியோர்கள் உள்ளனர்கள் இவர்களை மகிழ்விக்கும் வகையில் சரி கம பா பாடகர்களின் கலை நிகழ்ச்சி நிர்வாக அறங்காவலர் கீதா மூர்த்தி ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் சிறப்பு விருந்தினராக டி.எஸ்.பாலையா குரூப் ஆஃப் இன்ஸ்டிடியூஷன் பாலாஜி தங்கவேல் கலந்து கொண்டு கலை நிகழ்ச்சியை தொடங்கி வைத்து முதியோர்களுடன் அமர்ந்து கண்டு களித்தனர் இதில் சரிகம பா பாடகர்களின் மூன்று மணி நேரம் இடைவிடாத முதியோர்களுக்கு பிடித்தவாறு பாடல்களை பாடி நடனம் ஆடி மகிழ்ந்தனர் இதில் முதியோர் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்து அனைவரும் ஒன்றிணைந்து நடனமாடி சந்தோஷத்தை வெளிப்படுத்தினர்,



தொடர்ந்து பேசிய பாலாஜி தங்கவேல் கூறுகையில் இது போன்ற முதியோர் இல்லத்தில் கலை நிகழ்ச்சியில் நடத்துவதின் மூலம் முதியோர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைவதோடு எங்களுக்கு மிகவும் மனதிற்கு மகிழ்ச்சியாக உள்ளது எனவும் தொடர்ந்து இது போன்ற நிகழ்ச்சிகளை முதியோர் இல்லங்களில் அனைவரும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார், அதனை தொடர்ந்து சரிகமப சீசன் நான்கில் பங்கேற்ற முகேஷ் குமாரின் பிறந்தநாள் விழாவும் அனைத்து முதியோர்கள் முன்னிலையில் கேக் வெட்டி கொண்டாடினர் அதனைத் தொடர்ந்து அனைவருக்கும் இரவு உணவும் ஏற்பாடு செய்யப்பட்டது தொடர்ந்து கலை நிகழ்ச்சியில் ஈடுபட்ட கலைஞர்களுக்கு அனைவருக்கும் சங்கரா முதியோர் குழுமத்தின் சார்பில் நினைவு பரிசும் வழங்கி கௌரவித்தனர்..



# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.27.12 திட்டப்பணிகளை திறந்து வைத்தார்

திருப்பூர், ஜூன்.20-

திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் ரூ.27.12 இலட்சம் மதிப்பீட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் முடிவுற்ற திட்டப்பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ. மலர்விழி தலைமையில், மேயர் ந.தினேஷ்குமார் முன்னிலையில் கடந்த 18 ஆம் தேதி திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக மக்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல் படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நமது மாவட்டங்களில் இருக்க க்கூடிய திட்டப்பணிகளை அனைத்தும் விரைவாக மக்களுடைய பயன்பாட்டு ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அவர்களின் நல்லாட்சியுடன் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் பல்வேறு திட்டப்பணிகளை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்ற வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில் பல்வேறு திட்டங்களை வழங்கி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணத்திட்டம், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் கடன் தள்ளுபடி, நகைக்கடன் தள்ளுபடி, 1,50,000 விவசாயிகளுக்கு மின்இணைப்பு வழங்குதல், பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டம், பள்ளிக் குழந்தைகள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், தமிழ்புதல்வன் திட்டம், உழவரைத்தேடி வேளாண்மை - உழவர் நலத்துறை உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். இவ்வாறு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்தார்.

,அந்த வகையில் திருப்பூர் ஊராட்சி ஒன்றியம் ஈட்டிவீரம்பாளையம் ஊராட்சி, அப்பியபாளையம் பகுதி மற்றும் வள்ளிபுரம் ஊராட்சி, அவரபாளையம் பகுதியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.27.12 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நியாய விலைக்கடையினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், திருப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வேலுச்சாமி, அனார்களி, உதவிபொறியாளர் மகேஸ்வரி மற்றும் துறை சாரந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.




# கன்னியாகுமரி மாவட்டத்தில் புத்தளம் LMPC மேல்நிலைப்பள்ளியில் கன்னியாகுமரி போக்குவரத்து காவல்துறையினர் விழிப்புணர்வு நிகழ்ச்சி

கன்னியாகுமரி, ஜூன்.20-

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.R.ஸ்டாலின். உத்தரவுப்படி காவல்துறை காவல் துணை கண்காணிப்பாளர் P.மகேஷ் குமார் மேற்பார்வையில் கன்னியாகுமரி போக்குவரத்து காவல்துறையினர். விபத்தை தடுக்க பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக கன்னியாகுமரி போக்குவரத்து ஆய்வாளர் அருண் அறிவுறுத்தலின் பேரில் புத்தளம் LMPC மேல்நிலைப்பள்ளியில் போக்குவரத்து காவல்துறை சார்பு ஆய்வாளர் ஜெயபிரகாஷ், சாலை பாதுகாப்பு குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினார். 18 வயது நிரம்புவதற்கு முன்னர் வாகனம் ஓட்ட கூடாது எனவும் இருசக்கர வாகனங்கள் ஓட்டும் போது பெற்றோர்களை கட்டாயம் தலைக்கவசம் அணிவதை வலியுறுத்த வேண்டும் எனவும் "No Helmet No Entry" குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் மெர்லின் மஞ்சுளா தலைமை ஏற்று சிறப்புரை வழங்கினார்.



■ தமிழகவெற்றிக் கழக தலைவர் விஜய் யின் பிறந்தநாளை முன்னிட்டு மதுரை எஸ்.எஸ்.காலனி பகுதியில் நலத்திட்ட உதவி வழங்கப்பட்டது. தமிழகவெற்றிக்கழகப் பொதுச் செயலாளர் N ஆனந்த் வழிகாட்டுதலின்படி, மதுரை தெற்குமாவட்ட கழக செயலாளர் S.R.தங்கப்பாண்டிதலைமையில் எல்லீஸ் நகர் கழக பகுதி செயலாளர் R M J ஜான் பீட்டர் முன்னிலையில், சிறப்பு அழைப்பாளர் மனிதநேய டாக்டர் G.சிட்டி பாபு, 61 வது வார்டு செயலாளர் பரசுராமன், ஏற்பாட்டில் மற்றும் 61 வது வார்டு அனைத்து T V K நிர்வாகிகள் ஒத்துளைப்புடன் பொது மக்களுக்கு மளிகை பொருட்கள் சேலைகள் வழங்கப்பட்டது இந்நிகழ்வில் ஏராளமான பொதுமக்கள் மற்றும் த.வெ.க கட்சியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



# கலைஞர் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற பொதுக்கூட்டம், திருநங்கைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் அமைச்சர்கள் பங்கேற்பு

சோழிங்கநல்லூர், ஜூன்.20-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ் நிகழ்ச்சி ஏற்பாட்டில் தொகுதி க்குட்பட்ட சோழிங்கநல்லூரில் கைலாஷ் கார்டலில் ஜூன் (18) மாலை 6:00 மணிக்கு கலைஞர் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற பொதுக்கூட்டம் மற்றும் திருநங்கைகளுக்கு நலத்திட்ட உதவிகளை கழக முதன்மைச் செயலா ளர்கள், மாண்புமிகு அமைச்சர்கள், திரு, கே.என்.நேரு, மா.சுப்பிரமணியன், பி.மூர்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது. கே. என். நேரு அவர்கள் திமுக கட்சியில் சாதாரண கிளை செயலாளராக இருந்து படிப்படியாக மாவட்ட செயலாளராக பணியாற்றி இன்று அமைச்சராக உங்கள் முன்னிலையில் இருப்பதற்கு காரணம் திமுக ஆட்சி இப்படிப்பட்ட ஆட்சியை 2026 ஆம் ஆண்டு மாபெரும் வெற்றி அடைய செய்ய வேண்டும் என்று சிறப்பு உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, பகுதி, ஒன்றிய, வட்ட கழக, ஊராட்சி மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள், திருநங்கைகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் முடிவில் அனைவருக்கும் அருண் சுவை உணவு சிக்கன் பிரியாணி வழங்கப்பட்டது.

# தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் உங்களை தேடி, உங்கள் ஊரில் முகாமில் பொது மக்களிடமிருந்து மனுக்கள் வாங்கிய எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ

தாம்பரம், ஜூன்.20-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் (18/06/2025) நடைபெற்ற உங்களை தேடி, உங்கள் ஊரில் முகாமில் பங்கேற்ற பொது மக்களிடமிருந்து தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்று கொண்டு, மேலும் பெருங்களத்தூர் ஸிவிரி நகரில் வசிக்கும் 196 குடியிருப்போர்களின் 50 ஆண்டு கால போராட்டத்திற்கு பிறகு பட்டா கிடைத்தது. முதல் தவணையாக 30 பேருக்கு பட்டா சான்றிதழ்களை வழங்கினார் பின்னர் திருவஞ்சேரி ஊராட்சி மன்ற தலைவர் ஜனனி சுரேஷ்பாபு அவர்கள் மழைக்காலங்களில் மழைநீர் பாதிக்கப்படும் இடங்களை கல்வெட்டு அமைக்க வேண்டும் என



கோரிக்கை மனு மற்றும் முடிச்சூர் 11வது வார்டு உறுப்பினர் புனிதா ராஜா அவர்கள் 11வது வார்டுக்கு உட்பட்ட பகுதியில் 2008 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட இலவச வீட்டு மனை பட்டாவை கிராம கணக்கில் சேர்ப்பதற்கான கோரிக்கை மனுவை எஸ்.ஆர்.ராஜா எம்எல்ஏ விடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது இந்நிகழ்வில் தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் வருவாய் கோட்டாட்சியர் என்.முரளி, தாம்பரம் வட்டாட்சியர் ராஜேந்திரன், மாமன்ற உறுப்பினர் சி.சுரேஷ், வட்ட செயலாளர் மு.வினோத் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் பங்கேற்றனர்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161